No. of Printed Pages : 2

**5826 B**

பதிவு எண் | | | | | | | |

**X - STD**

# Part - III சமூக அறிவியல்

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

குறிப்பு : இவ்வினாத்தாள் **நான்கு** பகுதிகளைக் கொண்டது.

## பகுதி - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **14x1=14**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் **மிகவும் ஏற்புடைய** விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார் ?
(அ) ரூஸ்வெல்ட் (ஆ) சேம்பெர்லின் (இ) உட்ரோ வில்சன் (ஈ) பால்டுவின்

**2.** எந்த ஆண்டில் உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிக்கப்பட்டது ?
(அ) 1827 (ஆ) 1829 (இ) 1826 (ஈ) 1927

**3.** வேலூர் புரட்சிக்குப் பின் திப்பு சுல்தானின் மகன்கள் எங்கு அனுப்பப்பட்டார்கள் ?
(அ) கல்கத்தா (ஆ) மும்பை (இ) டெல்லி (ஈ) மைசூர்

**4.** அணிசேரா இயக்கத்தின் மாநாட்டில் இந்திய பிரதிநிதியாக கலந்துகொண்டவர் :
(அ) காந்தியடிகள் (ஆ) லால் பகதூர் சாஸ்திரி (இ) ஜவஹர்லால் நேரு (ஈ) வல்லபாய் பட்டேல்

**5.** **கூற்று :** ஜோதிபா பூலே ஆதரவற்றோருக்கான விடுதிகளையும், விதவைகளுக்கான விடுதிகளையும் திறந்தார்.
காரணம் : ஜோதிபா பூலே குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவை மறுமணத்தை ஆதரித்தார்.
(அ) **கூற்று** சரி, ஆனால் **காரணம்** கூற்றுக்கு பொருத்தமானதாக இல்லை
(ஆ) **கூற்று** சரி. **காரணம்** கூற்றுக்குப் பொருத்தமானதாக உள்ளது.
(இ) **காரணம், கூற்று** இரண்டுமே தவறு (ஈ) **காரணம்** சரி. ஆனால் **கூற்று** பொருத்தமற்றதாக உள்ளது.

**6.** __________ மண்ணில் இரும்பு ஆக்ஸைடு அதிகமாக காணப்படுகிறது.
(அ) வண்டல் (ஆ) கரிசல் (இ) செம்மண் (ஈ) உவர்மண்

**7.** பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும் :
(அ) வெள்ளப் பெருக்கு கால்வாய் (ஆ) வற்றாத கால்வாய்
(இ) ஏரிப்பாசனம் (ஈ) கால்வாய்

**8.** மிக அதிகமாக கிடைக்கக்கூடிய ஆற்றல் வளம் :
(அ) உயிரி சக்தி (ஆ) சூரியன் (இ) நிலக்கரி (ஈ) எண்ணெய்

**9.** சோட்டா நாகபுரி பீடபூமி பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு கருவாக இருப்பது :
(அ) போக்குவரத்து (ஆ) கனிமப் படிவுகள் (இ) பெரும் தேவை (ஈ) மின்சக்தி கிடைப்பது

**10.** மக்கள் தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு :
(அ) வரைபடவியல் (ஆ) மக்களியல் (இ) மானுடவியல் (ஈ) கல்வெட்டியல்

**11.** ஆளுநர் யாரை நியமனம் செய்வதில்லை ?
(அ) முதலமைச்சர் (ஆ) அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர்
(இ) மாநில தலைமை வழக்குரைஞர் (ஈ) உயர் நீதிமன்ற நீதிபதிகள்

**12.** 1954 இல் இந்தியா மற்றும் சீனாவால் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் __________ தொடர்பானது :
(அ) வியாபாரம் மற்றும் வணிகம் (ஆ) சாதாரண உறவுகளை மீட்டெடுப்பு
(இ) கலாச்சார பரிமாற்றங்கள் (ஈ) ஐந்து கொள்கைகளுடன் இணைந்திருத்தல்

**13.** இந்திய அரசாங்கத்தால் 1991 இல் __________ அறிமுகப்படுத்தப்பட்டது.
(அ) உலகமயமாக்கல் (ஆ) உலக வர்த்தக அமைப்பு
(இ) புதிய பொருளாதார கொள்கை (ஈ) பன்னாட்டு நிறுவனம்

**14.** __________ இந்தியாவில் தோன்றியதால் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது.
(அ) நீலப் புரட்சி (ஆ) வெள்ளைப் புரட்சி (இ) பசுமைப் புரட்சி (ஈ) சாம்பல் புரட்சி

## பகுதி - II

குறிப்பு : எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 28-க்கு கட்டாயமாக விடையளிக்கவும். **10x2=20**

15. முதல் உலகப்போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர் ?
16. முத்துத் துறைமுக நிகழ்வை விவரிக்கவும்.
17. இராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறு குறிப்பு வரைக.
18. களக்காடு போரின் முக்கியத்துவம் யாது ?
19. திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின் (1801) முக்கிய கூறுகளை தருக.
20. இந்தியாவில் காணப்படும் மண் வகைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.
21. கனிமங்கள் மற்றும் அதன் வகைகள் யாவை :
22. நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக.
23. வேளாண்மை - வரையறுக்கவும்.
24. ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் யாவை ?
25. சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.
26. உலக மயமாக்கல் என்றால் என்ன ?
27. FAO வின் படி உணவு பாதுகாப்பை வரையறுக்கவும்.
28. இந்திய பல்நோக்குத் திட்டங்களில் எவையேனும் நான்கினை அவற்றால் பயனடையும் மாநிலங்களுடன் எழுதுக.

## பகுதி - III

குறிப்பு : எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 42-க்கு கட்டாயமாக விடையளிக்கவும். **10x5=50**

29. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
30. ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகளில் வேலுநாச்சியாரின் சிறப்புகளை விவரிக்கவும்.
31. இந்தியச் சமூகத்தின் புத்தெழுச்சிக்கு இராமகிருஷ்ண பரமஹம்சரும் விவேகானந்தரும் ஆற்றிய தொண்டினைத் திறனாய்வு செய்க
32. வேலூரில் 1806 இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.
33. இந்திய மண் வகைகள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிட்டு மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரிக்கவும்.
34. வேறுபடுத்துக : (a) புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்
    (b) உலோகம் மற்றும் அலோக கனிமங்கள்

    காரணம் கூறுக : வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு
35. நகரமயமாக்கம் என்றால் என்ன ? அதன் சிக்கல்கள் யாவை ?
36. பசுமைப் புரட்சி ஏன் தோன்றியது என்பதைப் பற்றி விவரிக்கவும்.
37. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரிக்கவும்.
38. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.
39. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.
40. (i) வேளாண்மையை நிர்ணயிக்கும் காரணிகளை விவரிக்கவும்.
    (ii) இடப்பெயர்வு வேளாண்மை - குறிப்பு வரைக.

குறிப்பு : பார்வையற்ற மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் முறையே நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.

41. காலக்கோடு வரைக.
    1900 முதல் 1930 வரையிலான இந்திய வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.
42. கீழ்க்காணும் இடங்களை உலக வரைபடத்தில் குறிக்கவும்.
    (i) ஜப்பான் (ii) ரஷ்யா (iii) ஜெர்மனி (iv) சீனா (v) பசிபிக் பெருங்கடல்

## பகுதி - IV

குறிப்பு : பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். **2x8=16**

43. (அ) 19 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்காக இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும். **அல்லது**

    (ஆ) கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

குறிப்பு : பார்வையற்ற மாணவர்கள் வரைபட தொடர்புடைய வினாக்களுக்கு குறிப்புகள் மட்டும் எழுதவும்.

44. (அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்.
    (i) வண்டல் மண் (v) பருத்தி விளையும் பகுதி (ii) சென்னை
    (vi) மக்களடர்த்தி மிகுந்த இந்திய மாநிலம் (iii) ஹிராகுட் அணை
    (vii) சேலம் (iv) கங்கை டெல்டா (viii) நெல் விளையும் பகுதி

    **அல்லது**

    (ஆ) (i) கரிசல் மண்
    (ii) மும்பை (iii) மேட்டூர் அணை (iv) இரும்புத்தாது உற்பத்தி மையம்
    (v) இந்தியாவில் அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம் (vi) காவிரி டெல்டா
    (vii) விசாகப்பட்டினம் (viii) தேயிலை விளையும் பகுதி

-oOo-